இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

පාතුකාවලන්

PAATHUKAVALAN

Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர் : 139 இதழ் : 17 பக்கங்கள் : 08 திகதி : 20.09.2015 விலை : 20.00

# கிறிஸ்துவின் நற்செய்தியை விளம்பரப் படுத்துவதே துறவு சபைகளின் பிரதான பணியாகும்

## தேவ அழைத்தல் கண்காட்சியைத் திறந்து வைத்து யாழ். ஆயர் உரை




அர்ப்பண ஆண்டை முன்னிட்டு யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலையமும் பொதுநிலையினர் கழகமும் இணைந்து ஏற்பாடுசெய்த 'என் பின்னே வாருங்கள்' என்னும் தலைப்பிலான துறவற சபைகள் பற்றிய தேவ அழைத்தல் கண் காட்சி கடந்த 17ம் திகதி வியாழக் கிழமை காலை 9 மணியளவில் யாழ். மறைக்கல்வி நிலையத்தில் ஆரம்பமாகி 19ம் திகதி சனிக்கழமை வரை சிறப்பாக நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களும் மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருட்தந்தை அகஸ்ரின் அவர்களும் திருத்தந்தையின் கொடி, மறைக் கல்விக் கொடி ஆகியவற்றை முறையே ஏற்றிவைத்து கண் காட்சியை ஆரம்பித்து வைத் தார்கள்.


(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# துறவு சபைகளின் தனி வரம், அருங்காட்சியகப் பொருள் அல்ல

## திருத்தந்தை

ஒவ்வொரு துறவு சபைக்கும் வழங்கப்பட்டுள்ள தனி வரம், அருங்காட்சியகத்தில் வைத்துப் பாதுக்காக்கப்பட வேண்டிய காட்சிப் பொருள் அல்ல என்று திருத் தந்தை பிரான்சிஸ் அவர்கள், 'Schönstatt அருள் பணியாளர்கள்' என்ற துறவு சபையைச் சேர்ந்தவர்களிடம் கூறினார்.

இத்துறவு சபையினரின் உயர்மட்டக் கூட்டத்தில் பங்கேற்ற பிரதிநிதிகளை, அண்மையில் வத்திக்கானில் சந்தித்த திருத் தந்தை, துறவு சபைகளுக்கு வழங்கப்படும் தனிவரத்திற்கு விசுவாசமாய் இருப்பது என்பதை, வடிகட்டிய நீரைப் பாட்டிலில் பாதுகாப்பது என்ற கண்ணோட்டத்



தில் பார்க்காமல், இவ்வுலக எதார்த் தங்களுடன் கலக்கவேண்டிய ஒரு சவாலாக நோக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டினார்.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

# திருமண ஒப்பந்த முறிவு வழிமுறைகளைத் துரிதப்படுத்தும் புதிய கோட்பாடுகள்

திருமண ஒப்பந்த முறிவு குறித்த திரு அவையின் சட்ட அமைப்புக்களில் மாற்றங்களைப் புகுத்தி, Motu Proprio எனும், தன் சுய விருப்பத்தோடு எடுத்த முடிவுகள் கொண்ட அறிக்கை இரண்டை வெளியிட்டுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

Mitis Iudex Dominus Iesus அதாவது, 'ஆண்டவர் இயேசு, இரக்கமுள்ள நீதிபதி' என்று தலைப்பிடப்பட்ட அப்போஸ்தலிக்க மடல், இலத்தீன் திரு அவையின் திருமண ஒப்பந்த முறிவு குறித்த வழிமுறைகளைத் துரிதப்படுத்தும் நோக்கில் சீர்படுத்துவதாக அமைந்துள்ளது.

Mitis et misericors Iesus, அதாவது, 'கருணையும் இரக்கமும் உள்ள இயேசு' என்று

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

# கியூபாவில் திருத்தந்தை பயணத்தை முன்னிட்டு 3500 கைதிகள் விடுதலை

இம்மாதம் 19ம் தேதி முதல் 22ம் தேதி வரை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கியூபா நாட்டில் திருப்பயணம் மேற்கொள்ள உள்ளதை முன்னிட்டு, 3500க்கும் அதிகமான கைதிகளுக்கு நல்லெண்ண அடிப்படையில் விடுதலை வழங்க விருப்பதாக, கியூபா அரசு அறிவித்துள்ளது. (தொடர்ச்சி 7ம் பக்கம்)

# யாழ். மறைக்கோட்ட திருப்பாலத்துசபை எழுச்சிநாள்




யாழ் மறைக்கோட்ட திருப் பாலத்துவ சபை எழுச்சி விழா 22.08.2015 அன்று சனிக் கிழமை காலை 9.00 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் யாழ் மறைமாவட்ட திருப் பாலத்துவசபை இயக்குனர் அருட்பணியாளர் யூட் நிக்சன் அடிகளாரின் தலைமையில் திருப் பலியுடன் ஆரம்பமானது. திருப் பலியின் போது யாழ் மறைக் கோட்டத்திலுள்ள 11 ஆலயப் பங்குகளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 55 சிறுவர்களிற்கு திருப்பாலத்துவ சபைச் சின்னம் அணிவிக்கப்பட்டது. திருப்பலியின் நிறைவில் வருகைதந்த 410 சிறுவர்களையும் 10 குழுக்களாகப் பிரித்து புனித மாட்டீன் சிறிய குருமடத்திற்கு பேரணியாக அழைத்துச் சென்று தூய ஆவியானவர் பாடலுடன் பாப்பரசர் கொடியினை யாழ் மறை மாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குனர் அருட்பணியாளர் யூட் நிக்சன் அடிகளாராலும் திருப்பாலத்துவ சபைக் கொடியினை யாழ் மறைக்கோட்ட திருப்பாலத்துவ சபை இயக்குனர்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# குருத்துவ அபிஷேகப் பொன்விழாவில் வாழ்த்துகிறோம்.



யாழ். அடைக்கல ஆலயப் பங்குத்தந்தை அருட் திரு. மரியாம்பிள்ளை றெஜி இராஜேஸ்வரன். S.T.L (Rome) அடிகளார் வருகிற ஒக்ரோபர் மாதம் 3ம் திகதி தனது குருத்துவ அபிஷேகத்தின் 50 ஆண்டுகள் நிறைவை மகிழ்ச்சியோடு நினைவு கூர்ந்து இறைவனுக்கு நன்றி கூறுகிறார்.

50

யாழ்ப்பாணம், மன்னார் மறைமாவட்டங்களில் பல்வேறு பங்குகளில் பங்குத் தந்தையாகவும், புனித மடுத்தீனார் சிறிய குருமட அதிபராகவும், யாழ். மறைமாவட்ட நிதி முகாமையாளராகவும் பல பணிகளை சிறப்புற ஆற்றிய இவரை இறையாசீர் பெற்று பல்லாண்டு வாழ அன்போடு வாழ்த்துகிறோம்.

கர்த்தர் நகரத்தைக் கார்க்காவிட்டால் அதைக் கார்ப்பவன் கண்விழிப்பது வியர்த்தம் (சங். 127:1)

## எமது எண்ணம்

# முளையிலேயே கிள்ளி எறியப்படவேண்டிய விடயம்

தற்போது எமது யாழ். மறைமாவட்டத்தில் தொற்று நோயைப் போல எல்லாப் பங்குகளுக்கும் பரவிக்கொண்டிருக்கின்ற ஒரு வேண்டாத விடயம் பட்டாசு வெடிக்கும் கலாசாரமாகும். ஆலயத் திருநாட்களின்போது, குறிப்பாக நற்கருணைவிழா முடிந்த பிற்பாடு இரவு நடாத்தப்படும் வாணவேடிக்கை நிகழ்வும் மறுநாள் காலைத் திருநாள் திருப்பலி முடிந்ததும் தொடர்ச்சியாக வெடிக்கப்படும் பட்டாசுகளும் சில நிமிடங்களில் எரித்து சாம்பலாக்கும் பணம் பல இலட்சம் ரூபாக்களாகும்.

எமது திருத்தந்தை பிரான்சிஸ் அண்மையில் கூறிய விடயம் இது: நாம் இனிமேலும் எமது செயற்பாடுகள் ஏழைகளைப் பாதிப்பதில்லை என்று கூறிக்கொண்டு எம்மையே ஏமாற்றுவதை நிறுத்திக்கொள்ளவேண்டும் என்பதே திருத்தந்தையின் அறிவுரையாகும். எமது பணம், நாம் யாரையும் பாதிக்கவில்லை என்று கூறிச் செய்யப்படுகின்ற செயற்பாடுகளைத்தான் திருத்தந்தை கண்டிக்கிறார்.

ஒரு சிலநிமிடங்களில் எரிந்து கருகும் ஏராளமான பணத்தைக்கொண்டு செய்யக்கூடிய நற்செயல்கள் எவ்வளவோ இருக்கின்றன. இரவு வானத்திலே நடக்கின்ற வர்ணஜாலத்தைப் பார்த்துக்கொண்டிருக்கின்ற எத்தனையோபேர் அன்று இரவு சாப்பிட ஒழுங்கான உணவின்றி படுக்கைக்குச் செல்லும் கதைகள் எத்தனைபேருக்குத் தெரியும்? மறுநாள் திருநாள் திருப்பலிக்குப் புத்தாடை அணியவிரும்பியும் அதைச் செய்யமுடியாமல் மனம் நொந்த நிலையில் காதுகளைப் பொத்திக்கொண்டு வெடி ஓசைகளை இரசித்தும் இரசிக்காமலும் இருக்கும் நெஞ்சங்கள் எத்தனை எத்தனை? இங்கு எரிந்து சாம்பலாகிக் கொண்டிருக்கும் பண நோட்டுக்களைக் கொண்டு எனது குமரைக் கரை சேர்க்கலாமே என்ற ஏக்கத்தோடு வானத்திலே சிதறும் நட்சத்திரங்களுக்கப்பால் உற்று நோக்கிக்கொண்டிருக்கும் தாய்க்குலம் எத்தனைபேர் இருக்கிறார்கள் என்ற சிந்தனை எத்தனை பேருக்குண்டு?

ஒருசிலரின் சிலநிமிட சந்தோஷங்களுக்காக செய்யப்படுகின்ற இந்த அநாவசியமான செயல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்பதற்கு வேறு காரணங்களுமுண்டு.

ஆலயத்தைச் சேர்ந்தபலர், குறிப்பாக இளைஞர்கள் வழிபாடுகளை முற்றிலுமாகப் புறக்கணித்துவிட்டு எப்போது வழிபாடுகள் முடிவடையும் வாணவேடிக்கைகளைத் தொடங்கலாம் என்று காத்துக்கொண்டிருக்கும் நிலை பல பங்குகளில் உண்டு. 30 ஆண்டுகளுக்கு மேலாக துப்பாக்கி வெடிகளையும் செல் அடிகளையும் கேட்டுக் கதிகலங்கி அவை ஏற்படுத்திய உளத் தாக்கங்களிலிருந்து இன்னும் விடுபடமுடியாமல் தவிக்கின்ற பல பாதிக்கப்பட்ட மக்கள் இவ்வேளைகளில் அடிமனதில் தாங்கமுடியாத பீதியை அனுபவித்தாலும் அவற்றை வெளிக்காட்டாமல் மற்றவர்களோடு சேர்ந்து இவற்றை இரசிப்பதுபோல பாசாங்கு செய்கிறார்களென்பதும் பலர் அறியாததே. இதய நோயாளர், இரத்த அழுத்த நோயாளர், குழந்தைகள் பலரினது வாழ்வை செவிப்பறையை அதிரவைக்கும் இவ் வெடி ஓசைகள் வெகுவாகப் பாதிக்கின்றன என்பதைப் பற்றிச் சிந்திப்பவர்கள் இருக்கின்றோமா?

ஆலயத் திருநாட்கள் மகிழ்ச்சியான கொண்டாட்டங்கள்தான். ஆனால், அந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்த இந்த அநாவசியமான, அநாகரீகமான, தற்காலிகமான வழியை முற்றாக விட்டுவிடுவோம். அயலவரின் வாழ்வில் நிரந்தரமான மகிழ்ச்சியைக் கொண்டுவரக்கூடிய செயல்களை இதற்கு விரயமாக்கும் பணத்தைக் கொண்டு செய்வதற்கு முயற்சிப்போம். பெருநாளுக்குப் பட்டாசு கொழுத்தப் பணம் கொடுக்க முன்வரும் பலர், ஏழைகளுக்கு உதவிசெய்யப் பணம் கேட்டால் தரமறுக்கின்ற நிலை இன்றும் இருக்கின்றதென்றால் நாம் கேட்கவேண்டிய ஒரு கேள்வி உண்டு: எனது விசுவாசம் உண்மையானதா? இதுவே அந்தக் கேள்வி.

பட்டாசுக் கலாச்சாரத்தை முளையிலேயே கிள்ளி எறிவோம். எமது ஆலயத்தின் அடுத்த திருநாளின்போது கடந்த திருநாளின் போது நாம் இதற்கென சேகரித்து செலவளித்த பணத்தை நன்மைபயக்கின்ற வேறு எவ்வழியில் செலவுசெய்யலாம் என்று சிந்தித்து செயற்படுவோம். பட்டாசு கொழுத்தி திருநாளோடு முடிந்துவிடுகின்ற மகிழ்ச்சியை இச்செயற்பாடுகள் மூலம் வருடம் முழுவதும் நிலைத்திருக்கும் நிரந்தர மகிழ்ச்சியாக்குவோம்.

**அருட்பணி. ப.யோ. ஜெபரட்ணம்**




## திருத்தந்தை உட்பட, அனைவரும் வெளிவேடக்காரர்களாக மாறும் ஆபத்து

திருத்தந்தையாகிய தன்னையும் சேர்த்து, அனைவருமே வெளிவேடக் காரர்களாக மாறிவிடும் ஆபத்து உள்ளது என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

நமது குறைகளையும், குற்றங்களையும் ஏற்றுக்கொள்ளும் துணிவு இருந்தால், அடுத்தவரை இரக்கத்துடன் காணும் பக்குவமும் பெறுவோம் என்றும், பிறரைக் குறை சொல்லாமல், பழித்துரைக்காமல் வாழும் எவரையும், உடனடியாகப் புனிதர்களாக உயர்த்தலாம் என்றும், மன்னிக்கும் பரந்த மனதைப் பெற அனைவரும் செபிக்க வேண்டும் என்றும் திருத்தந்தை தன் மறையுரையில் குறிப்பிட்டார்.

தன் கண்ணில் இருக்கும் மரக் கட்டையை அகற்றாமல், சகோதரன் கண்ணில் இருக்கும் துரும்பை அகற்ற எண்ணுவோரின் வெளிவேடத்தை இயேசு நற்செய்தியில் சாடியிருப்பதைக் குறிப்பிட்டுப் பேசிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இத்தகைய வெளிவேடம், திருத்தந்தை துவங்கி, அனைவரிலும் இருக்கக்கூடும் என்று எடுத்துரைத்தார்.

## சூற்றுச் சூழல் மாற்றங்களால் பாதிக்கப்படுவது வறியோரே

சுற்றுச்சூழல் மாற்றங்களால் அதிகம் பாதிக்கப்படுவது வறியோரே என்ற காரணத்தால் தான், இந்த மாற்றங்களைக் குறித்து நாம் தீவிரமாகவும், அவசரமாகவும் சிந்திக்க வேண்டியுள்ளது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.

அறிவியல், மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள், மனிதர்கள் கரங்களில் எல்லையற்ற சக்தியை வழங்கியுள்ளன என்று குறிப்பிட்ட திருத்தந்தை, இந்தச் சக்தியை, சமுதாய முன்னேற்றத்திற்கு, குறிப்பாக, வறியோரின் வாழ்வுத் தரம் முன்னேறுவதற்குப் பயன்படுத்த வேண்டும் என்று விண்ணப்பித்தார்.

## புறம்கூறும் மனிதர்கள், தீவிரவாதிகளை ஒத்தவர்கள்

பிரிவுகளை விதைப்பது திரு அவையில் ஒரு நோயாக உள்ளது என்றும், புறம்கூறும் மனிதர்கள், குண்டுகளை வீசிவிட்டுச் செல்லும் தீவிரவாதிகளை ஒத்தவர்கள் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.

போரையும், வெறுப்பையும் பற்றிய செய்திகளையே ஒவ்வொருநாளும் கேட்டுவரும் நாம், நம் பங்குக்கு, ஒப்புரவையும், அமைதியையும் கொணர்கிறோமா என்ற கேள்வியை எழுப்புவது அவசியம் என்றும், வதந்திகளைப் பரப்புவதிலும், புறம் கூறுவதிலும் ஈடுபடும் கிறிஸ்தவர்கள், குண்டை வீசி மற்றவர்களைக் கொன்றுவிட்டு, அங்கிருந்து அகன்று விடும் தீவிரவாதிகளுக்கு ஒப்பானவர்கள் என்றும் திருத்தந்தை சுட்டிக்காட்டினார்.

## மனிதகுலத்தின் பரம்பரைச் சொத்து, சுற்றுச்சூழல்

சுற்றுச்சூழல் என்பது, மனித குலத்திற்கு பொதுவில் வழங்கப்பட்டுள்ள ஒரு பரம்பரைச் சொத்து. எனவே, இதை காப்பது அனைவருக்கும் உள்ள கடமை என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன்னைச் சந்திக்க வந்திருந்த பன்னாட்டு அமைச்சர்களிடம் கூறினார்.

சுற்றுச்சூழல் மாற்றங்களால் அதிகம் பாதிக்கப்படுவது வறியோரே என்பதை எடுத்துரைத்த திருத்தந்தை, சுற்றுச்சூழல் சீரழிவையும், வறுமையையும் இணைத்துச் சிந்திப்பது அனைத்து அரசுகளின் கடமை என்று வலியுறுத்தினார்.

வளர்ந்துவிட்ட, மற்றும் வளர்ந்துவரும் நாடுகளுக்கிடையே, இயற்கை வழங்கும் சக்திகளைப் பயன்படுத்தும் அளவில் நிலவ வேண்டிய நீதியான சமத்துவம் குறித்தும், சமுதாயத்தின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டுள்ள மக்களையும் இணைத்து முடிவுகள் எடுப்பது, அனைவருக்கும் பாதுகாப்பான இயற்கையை உருவாக்கும் என்பதையும் திருத்தந்தை சுட்டிக்காட்டினார்.

## இறைவனை நெருங்கி வருவதற்கு நோய்களும் ஒரு வழி

மனித குலத்தின் துன்பங்கள் மற்றும் நோய்களுக்கு விடை தேட முயலும் மக்களுக்கு, இறைவன் மீது கொள்ளும் நம்பிக்கை, ஆழமான ஓர் அர்த்தத்தைக் கண்டுணர உதவுகின்றது என, தன் நோயாளர் உலக தினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

2016ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11ம் திகதி, லூர்து அன்னை திருவிழாவின்போது, திரு அவையில் சிறப்பிக்கப்பட உள்ள 24வது நோயாளர் உலக தினத்திற்கு செய்தி வெளியிட்டுள்ள திருத்தந்தை, விசுவாசம் என்பது நோய்களையோ, அவை தரும் துன்பங்களையோ அகற்றுவதில்லை, மாறாக, அவை குறித்த ஆழமான அர்த்தத்தைக் கண்டுகொள்ள உதவுகின்றது என அதில் குறிப்பிட்டுள்ளார்.

கானாவூர்த் திருமணத்தின் போது, இரசம் தீர்ந்துவிட்ட நிலையில், அன்னை மரி, பணியாட்களை நோக்கி, 'அவர் சொல்வதெல்லாம் செய்யுங்கள்' எனக் கூறிய வார்த்தைகளை, தன் செய்தியின் மையப்பொருளாக எடுத்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மக்கள் மீது அன்னை மரியா, எவ்வாறு அக்கறையுடையவராக இருந்தாரோ, அதுபோல் இன்று, நோயாளிகளிடையே பணிபுரிவோரும், நோயாளிகளின் தேவைகளை உணர்ந்து, அன்புடன் செயலாற்ற வேண்டும் எனத் தன் செய்தியில் விண்ணப்பித்துள்ளார்.

'அவர் சொல்வதெல்லாம் செய்யுங்கள்' எனப் பணியாட்களிடம் சொல்வதன் வழியாக, புதுமை நிகழ்வதற்கு, மனிதர்களின் ஒத்துழைப்பையும் அன்னை மரியா ஊக்குவிக்கிறார் எனவும் திருத்தந்தையின் செய்தி கூறுகிறது.

வரும் ஆண்டின் நோயாளர் உலக தின கொண்டாட்டங்கள், புனித பூமியின் நாசரேத் நகரில் இடம்பெற உள்ளன.

# அர்ப்பண ஆண்டு




## கிளரீசியன் சபையினரின் மறைப்பணியைப் பாராட்டிய திருத்தந்தை


©L'Osservatore Romano

உலகளாவிய கிளரீசியன் மறை பணியாளர்களின் உயர் மட்ட உலக அவைக் கூட்டத்தில் கலந்துகொள்ள உரோம் நகர் வருகை தந்திருக்கும் 120க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைச் சந்தித்த திருத்தந்தை, இத்துறவு சபையின் அகில உலகத் தலைவராகத் தேர்ந்தேடுக்கப்பட்டிருக்கும், மேத்யு வட்டமட்டம் அவர்களின் வாழ்த்துக்கு நன்றி கூறி, அவர்களின் உலகளாவிய மறைப்பணியைப் பாராட்டினார்.

மறைபரப்பு நோக்கத்தைக் கொண்டுள்ள கிளரீசியன் துறவு சபை, உலகிலிருந்து எழும் பல்வேறு குரல்களைக் கேட்டு, பகுத்தறியும் திறன் கொண்டதாக விளங்கவேண்டும் என்று திருத்தந்தை குறிப்பிட்டார்.

புனித அன்டனி மரிய கிளாரெட், தன் ஆயர் இலச்சனையில் பொறித்திருந்த 'கிறிஸ்துவின் பேரன்பு நம்மைஆட்கொள்கிறது' என்ற வார்த்தைகள், நம்மையும் ஆட்கொண்டு, வழிநடத்தவேண்டும் என்று திருத்தந்தை தன் உரையில் எடுத்துரைத்தார்.

## தொன்போஸ்கோ சலேசிய சபை அன்புடன் அழைக்கின்றது



ஏழை, எளிய,
அநாதைகள்
ஆதரவற்ற
மற்றும்
இளைஞர் யுவதிகளுக்கு
உதவிடும் சபை




நீங்களும் உங்கள்
தாராள மனநிலையோடு
இந்தப் புனித பணியின்
பங்காளிகளாகச் சேர்ந்து
உழைத்திட அன்புடன்
அழைக்கின்றோம்.

**சலேசியக் குருக்களாக, அருட்சகோதரர்களாகப் பணிபுரிய**

**தொடர்புகளுக்கு:**
இறை அழைத்தல் இயக்குனர்
தொன்போஸ்கோ இளம் குருமடம்,
கற்குவாறி வீதி,
மாங்குளம், முல்லைத்தீவு, இலங்கை

தொலைபேசி: (0094)774448671
(0094)750978314

**சலேசிய அருட்சகோதரிகளாகப் பணிபுரிய**

**தொடர்புகளுக்கு:**
சலேசிய அருட்சகோதரிகள்
இல. 52B, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 0212217458
0725246570

AD 66

## வத்திக்கானில் அர்ப்பணிக்கப்பட்ட இளையோரின் உலக மாநாடு

அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு என்பதன் பொருளை உலகறியச் செய்யும் இளையோரை, புனிதர்கள் பேதுரு, பவுல் ஆகியோரின் திருத்தலங்கள் அடங்கிய உரோம் நகரில் வரவேற்கிறேன் என்று திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

செப்டம்பர் 15 முதல், 19 முடிய, உலகின் பல நாடுகளிலிருந்து வத்திக்கானில் கூடிவந்துள்ள அர்ப்பணிக்கப்பட்ட இளையோர் மாநாட்டின் பிரதிநிதிகளை, அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு திருப்பேராயத்தின் தலைவர், கர்தினால் João Braz de Aviz அவர்கள், இவ்வாறு வரவேற்றார்.

அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு உலக ஆண்டின் ஒரு நிகழ்வாக, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த இளம் துறவியர் 50 பேர், எரியும் திரிகளையும், அன்னை மரியாவின் திரு உருவத்தையும் பசிலிக்கா வளாகத்திற்குள் பவனியாக கொணர்ந்தனர்.

'உலகை விழித்தெழச் செய்யுங்கள்' என்ற மையக் கருத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த அர்ப்பணிக்கப்பட்ட இளையோர் மாநாட்டின் துவக்க நிகழ்வில், அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு திருப்பேராயத்தின் செயலர், பேராயர் José Rodríguez Carballo அவர்கள்,

**துணிவுடன் இருங்கள்,**
**பிரமாணிக்கமாக இருங்கள்,**
**பலன் தாருங்கள்**

என்ற மூன்று கருத்துக்களில் இளையோருக்கு மறையுரை வழங்கினார்.



# திருச்சிலுவையின் மகிமை

## - ஒரு வரலாறு -

செப்ரெம்பர் 14ம் திகதி திருச்சபையானது திருச்சிலுவை மகிமைப் பெருவிழாவைக் கொண்டாடுகிறது.

இவ்விழா 'திருச்சிலுவையின் மகிமை', 'சிலுவையின் வெற்றி', 'பெருமைமிகு திருச்சிலுவை நாள்", 'உயிர்வழங்கும் அரிய சிலுவை உயர்த்தப்பட்ட நாள்' என பல்வேறு சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகிறது. திருச்சிலுவையின் மகிமையின் வரலாறு இது.

நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த கான்ஸ்டன்டைன் என்ற உரோமைப் பேரரசரின் அன்னை, புனித ஹெலெனா அவர்கள், ஒருமுறை புனித பூமிக்குத் திருப்பயணம் மேற்கொண்டபோது அங்கே ஒரு குறிப்பிட்ட இடத்தில் பூமியை அகழ்வதற்கு அவர்கள் தூண்டப்பட்டார். அவ்விடத்தை அகழ்ந்தபோது, மூன்று சிலுவைகள் கண்டுபிடிக்கப்பட்டன. அம்மூன்று சிலுவைகளில் இயேசு அறையப்பட்ட சிலுவை எது என்பதைக் கண்டுபிடிக்க, புனித ஹெலெனா ஒரு சோதனையை மேற்கொண்டார். அதாவது மரணப் படுக்கையில் போராடிக் கொண்டிருந்த ஒரு பெண்ணை அவர் அவ்விடத்திற்குக் கொணர்ந்தார். அப்பெண், முதல் இரு சிலுவைகளைத் தொட்டபோது, அவரிடம் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. மாறாக மூன்றாவது சிலுவையை அவர் தொட்டதும் குணமடைந்தார். எனவே, அச்சிலுவையே இயேசு அறையப்பட்ட சிலுவை என புனித ஹெலெனா அறிந்துகொண்டார்.

அச்சிலுவையைக் கண்டுபிடித்த இடத்தில், புனித கல்லறைக் கோவில் நிறுவப்பட்டது. இக்கோவில், 335ம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டு, செப்டம்பர் 13, 14 ஆகிய தேதிகளில் அர்ச்சிக்கப்பட்டது. இந்த அர்ச்சிப்பின் நினைவாகத்தான் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மாதம் 14ம் தேதியன்று திருச்சிலுவை உயர்த்தப்பட்டத் திருநாள் என்று திருச்சபையால் கொண்டாடப்படுகிறது. இயேசு அறையப்பட்ட சிலுவையின் ஒரு பெரிய துண்டு புனித கல்லறைக் கோவிலில் பாதுக்காக்கப்பட்டு வருகின்றது.

614 ஆம் ஆண்டு பெர்சிய நாட்டு அரசன் மெசபத்தோமியாவின்மீது (புனித நாடுகள் இருக்கும் பகுதி) படையெடுத்துச் சென்று அங்கிருந்த குருக்கள், கன்னியர்கள் கிறிஸ்தவர்கள் என்று பல்லாயிரக் கணக்கான மக்களைக் கொன்றொழித்து, அங்கே இருந்த திருச்சிலுவையை எடுத்துக்கொண்டு போய்விட்டான். அதை 627 ஆம் ஆண்டு ஹெராக்ளியஸ் என்ற அரசன்தான் மீட்டுக்கொண்டு வந்து மீண்டும் அதே இடத்தில் நிறுவினான். அன்றிலிருந்து மகிமை பொருந்திய திருச்சிலுவை அதே இடத்தில் இருந்து அனைவருக்கும் அருள்பாலித்துக்கொண்டிருக்கிறது.

தூய ஆண்ட்ருஸ் இவ்வாறு கூறுவார், "திருச்சிலுவை நம்மை இருளிலிருந்து, ஒளிக்கு அழைத்து வந்தது. அதுவே நமக்கு வாழ்வு தந்தத் விண்ணகத்தின் கதவைத் திறந்து தந்தது" என்று. ஆம், இது எவராலும் மறுக்கமுடியாத உண்மை. பவுலடியார் கூட இதே கருத்தை 1 கொரி 1:18 ல் வலியுறுத்துவார். "சிலுவையைப் பற்றிய போதனை அழிவுறுவோருக்கு மடமை, ஆனால் மீட்புப் பெறும் நமக்கோ கடவுளின் வல்லமை" என்று.

இஸ்ரயேல் மக்கள் ஏதோம் என்ற நாட்டைச் சுற்றி வரும்போது, ஓர் என்ற மலையிலிருந்து "செங்கடல் சாலை" வழியாகப் பயணப் படும்போது மோசேக்கும், கடவுளுக்கும் எதிராகக் கிளர்ந்தெழுகிறார்கள். இதனால் கடவுள் அவர்கள்மீது சினம் கொண்டு கொள்ளிவாய்ப் பாம்புகளை அனுப்பிச் சாகடிக்கிறார். ஆனால் மோசே மீண்டும் கடவுளிடத்தில் மன்றாடுகிறபோது, அவர் அவர்கள்மீது இரக்கம் கொண்டு, "வெண் கலப்பாம்பு ஒன்றைச் செய்து, அதனை மக்கள் நடுவே வை, அப்போது பாம்பினால் கடிபட்ட எவரும் அதனைப் பார்க்கிறபோது உயிர்பிழைப்பார்கள்" என்று மோசேயிடம் கூறுகிறார். மோசேயும் அவ்வாறே செய்ய, இஸ்ராயேல் மக்கள் உயிர்பிழைக்கிறார் கள்.

இப்பகுதியில் வரக்கூடிய வெண்கலப் பாம்பு திருச்சிலுவையின் முன் அடையாளமாக இருக்கிறது. எவ்வாறெனில் வெண்கலப்பாம்பைப் பார்த்தவர்கள் வாழ்வுபெற்றதுபோல திருச்சிலுவையைப் பார்ப்பவர்கள் வாழ்வு பெறுவார்கள்.

பொதுவாக சிலுவை மரணமானது அல்லது சிலுவையானது மிகவும் இழிவாகக் கருதப்பட்டது. இது கொடியவர்களுக்கும், நாட்டைக் காட்டிக் கொடுத்தவர்களுக்கும்தான் வழங்கப்படும். ஆனால் அப்படிப்பட்ட சிலுவைச் சாவை ஆண்டவர் இயேசு நம்மீது கொண்ட அன்பினால் மகிழ்வோடு ஏற்றுக்கொள்கிறார்.

"கடவுள் தன்மையில் விளங்கிய அவர், தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று, மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்படிபவரானார்". ஆம், இயேசு தன்னை வெறுமையாக்கி, அடிமையின் கோலம் கொண்டு, சிலுவை மரணம் ஏற்றார் என்றால் அது அவர் நம்மீது அளவுகடந்த அன்பு கொண்டிருக்கிறார் என்பதே உண்மை. தந்தைக் கடவுள் தன் மகனாகிய இயேசுவையே இவ்வுலகிற்கு அளித்தார் என்றால், இயேசு அதனைச் செயல்படுத்தினார். அதனால்தான் கடவுள், ஆண்டவர் இயேசுவை எப்பெயருக்கும் மேலாக உயர்த்துகிறார். நாமும் இறைவனின் திட்டத்தின்படி வாழ்ந்தோம் என்றால் கடவுள் நம்மை மேலும், மேலும் உயர்த்துவார்.

இயேசுவின் குழந்தைப் பருவத்தில் நடந்த நிகழ்ச்சியாகச் சொல்வர்.

ஒருமுறை இயேசு, டைட்ஸ் என்ற சிறுவனோடு பேசிக்கொண்டிருந்தபோது அவனித்தில், "எதிர்காலத்தில் நீ என்னவாக போகிறாய்?" என்று கேட்டார். அதற்கு டைட்ஸ், "நான் மிகப்பெரிய தச்சராக மாறி, அரசர் அமர்வதற்கான சிம்மாசனம் ஒன்றைச் செய்வேன். அரசர் அதில் அமர்ந்துகொண்டு எல்லா மக்களுக்கும் ஆசி வழங்குவார்" என்றான். இயேசுவும் சரி என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். டைட்ஸ் சில நாட்களுக்குப் பிறகு ஜாப்பா என்ற ஓர் இடத்திற்குக் குடிபெயர்ந்தார்.


ஆண்டுகள் பல கழிந்தன. அப்போது இயேசுவைச் சிலுவையில் அறைய, பிரத்தியேகமான சிலுவைமரம் ஒன்று தேவைப்பட்டது. எனவே அப்படிப்பட்ட சிலுவை மரம் செய்வதற்குப் பெயர்போன டைட்ஸ் அங்கே அழைத்துவரப்பட்டான். அவன் இயேசுவுக்குத்தான் சிலுவை செய்ய வந்திருக்கிறோம் என்று தெரியாமல் செய்தான்.

ஒரு சில நாட்களுக்குப் பிறகு உண்மையை அறிந்துகொண்டு இயேசு அறையப்பட்டிருந்த சிலுவையை நோக்கி ஓடினான். அவரைப் பார்த்ததும் "நானே உமக்கு சிலுவை செய்யும்படி ஆகிவிட்டதே" என்று கண்ணீர்விட்டு அழுதான். அப்போது இயேசு அவனிடம், "நீ சிறு வயதில் என்னிடம் என்ன சொன்னாய் என்று யோசித்துப் பார். அரசன் அமர்வதற்காக சிம்மாசனம் செய்வேன், அதிலே அரசர் அமர்ந்துகொண்டு எல்லா மக்களுக்கும் ஆசி வழங்குவார் என்று சொன்னாய். இப்போது அனைத்துலகின் அரசனாகிய நான் இந்த சிலுவை என்ற சிம்மாசனத்தில் அமர்ந்துகொண்டு எல்லாருக்கும் ஆசி வழங்குகிறேன் பார்" என்று சொன்னார். இதைக் கேட்டு அவன் அமைதி அடைந்தான்.

சிலுவை அவமானச் சின்னமல்ல, அது அரியாசனம் அது வெற்றியின் சின்னம் என்பதையே இந்நிகழ்வு உணர்த்துகிறது.

நாம் நமக்கு மீட்பைத்தரும் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் அன்பை உணர்ந்து, அவரைப் போன்று இறைவழியில் நடப்போம். இறையாசிரை நிறைவாய்ப் பெறுவோம்.

## மரியன்னையின் துயரங்கள்



செப்ரெம்பர் 15ம் திகதி திருச்சபையானது மரியன்னையின் துயரங்களை - வியாகுல அன்னையின் நினைவு நாளைக் - கொண்டாடுகிறது. "பிள்ளைகளுக்காகத் தாய் செய்யும் தியாகத்தை இத்தகையதென்று எழுத்தால் எழுத முடியாது என்பார்" திரு. வி. க. அவர்கள். ஆம், ஒரு குழந்தையின் முன்னேற்றத்திற்காகத் தாய் அனுபவிக்கும் துன்பங்கள் ஏராளம். அதற்கு மரியன்னையும்கூட விதிவிலக்கல்ல.

இயேசுவை ஒரு முழுமனிதனாக வளர்த்தெடுப்பதில் மரியாள் மிகபெரிய பங்காற்றியிருக்கிறாள் என்று சொன்னால் அது மிகையாகாது. அதற்காக அவர் அனுபவித்த துன்பங்கள் அதிகம் கொடுத்த விலை அதிகம்.

மரியாள் இயேசுவுக்காகப் பல்வேறு துன்பங்களை, இன்னல்களை அனுபவித்த போதிலும் திருச்சபை ஏழு துன்பங்களை - வியாகுலங்களைப் - பட்டியலிடுகிறது. அவையாவன

1. சிமியோனின் "உள்ளத்தை ஊடுருவும்" இறைவார்த்தை,
2. எகிப்துக்குத் தப்பியோடல்,
3. இயேசு கோவிலில் காணாமல் போதல்,
4. சிலுவை சுமந்து சென்ற இயேசுவை சந்தித்தல்,
5. இயேசு சிலுவையில் அறையப்படல்,
6. இறந்த இயேசு உடலை மடியில் வைத்தல்,
7. இயேசுவைக் கல்லறையில் அடக்கம் செய்தல்.

இதுபோன்ற தருணங்களில் எல்லாம் மரியாளின் உள்ளத்தை நிச்சயம் ஒரு வாள் ஊடுருவியிருக்கலாம். ஆனால் மரியாள் தான் பட்ட துன்பங்களை எல்லாம் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்கிறார்.

எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்ட வாசகத்தில் படிக்கின்றோம். "இயேசு இறைமகனாக இருந்தும், துன்பங்களின் வழியாகக் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்" என்று. மரியாளும் கூட தனது துன்பங்களின் வழியாகத் தந்தைக் கடவுளின் இறைத்திருவுளத்திற்குக் கீழ்படிந்து நடக்கிறார். அவரது அன்புக்கு உரியவராகிறார்.

இறைவழியில் நடக்கும் நாம் ஒவ்வொருவருமே நமக்கு வரும் துன்பங்களைத் துணிவோடு, மகிழ்வோடு ஏற்றுக் கொள்வோம். ஏனெனில் துன்பம் இல்லை என்றால் இன்பம் இல்லை. சிலுவை இல்லை என்றால் மீட்பு இல்லை.

ஆகையால் மரியாளைப் போன்று துன்பங்களைத் துணிவோடு ஏற்போம். இறையருள் பெறுவோம்.

## பொம்மைத் துணை?

அவளின்
'நடைசரியில்லை'என்கிறாய்!
பின்
'உடைசரியில்லை'என்கிறாய்!
அதன்பின்
'வாய் சரியில்லை'என்கிறாய்!
நாள்போக
'வளர்ப்புசரியில்லை'என்கிறாய்!...

அவ்வாறாயின்,
நடையைப் பயிற்றுவித்து
உடையைத் தயாரித்து
வாயைவடிவமைத்து
வேண்டியபொம்மையை
நீயே
வார்த்து
வடிவமைத்து
துணையாக
வைத்துக்கொள்ளலாமே!

*செ.அன்புராசா, அமதி*

## வருந்தாத மனங்களும் திருந்தாத உள்ளங்களும்

பலபேர் காத்திருக்கிறார்கள்
மதம் மாற!
ஆனால் எத்தனைபேர்
காத்திருக்கிறார்கள் மனம்மாற?

குருக்கள் நாவரள முழங்கினார்கள்
போதனைகள் பல
எல்லாம் எருமை மாட்டில் விழுந்த
மழைத்துளி போல

குருக்களின் போதனைகள் நல்லாயிருக்கிறது
பலபேரின் வாழ்த்துக்கள்
ஆனால் அதன்படி வாழத்தானே
மறுக்கிறார்கள் மனிதர்கள்

பத்துக் கட்டளை கடவுள்
எல்லோருக்கும் போட்ட மெமறிக் காட்
அந்தக் காட்டை கழட்டி எறிந்து விட்டு
போட்டு வைத்திருக்கிறார்கள்
விதம் விதமான மெமறி

ஆதாம் ஏவாள் மட்டும் தான்
விலக்கப்பட்ட கனியை உண்டதாகப்
பலபேரின் நினைப்பு

ஆனால் எல்லோரும் தான்
உண்டு கொண்டிருக்கிறார்கள்
விலக்கப்பட்ட கனிகளை

அடுத்தவன்
மனைவி அடுத்தவள் கணவன்
விபச்சாரம் கருக்கலைப்பு

கொலை கொள்ளை கற்பழிப்பு
பொறாமை பேய் பில்லி சூனியம்

முறைகேடு அற்ற பாலியல்
எல்லாம் கடவுளால்
விலக்கப்பட்ட கனிகள் தான்

*உயிரோவியன்*

# இறைவா! உமக்கே புகழ் : 'Laudato Si'

# உலகின் கவனத்தை ஈர்த்த சுற்றுச்சூழல் பற்றிய திருத்தந்தையின் திருமடல் பற்றிய விளக்கம்

*- சென்ற இதழ் தொடர்ச்சி*

## பிரிவு 4 ஒருங்கிணைக்கப்பட்ட இயற்கையியல்

திருமடல் தரும் பரிந்துரைகளின் இதயமாக விளங்குவது ஒருங்கிணைக்கப்பட்ட இயற்கை. இது ஒரு புது வழி நீதி. மனிதப் பிறவிகள் இவ்வுலகில் பெற வேண்டிய தனித்துவமான இடத்தை மதிக்கவும், நமது சுற்றுப்புறத்துடன் நாம் கொள்ளும் உறவை மதிக்கவும் இந்த இயற்கையியல் சொல்லித் தருகிறது. நம்மிடமிருந்து பிரிந்து, நாம் வாழ்வதற்கு ஒரு பின்புலமாக மட்டும் இயற்கையைக் கருதமுடியாது (139). பொருளாதாரம், அரசியல், கலாசாரம், குறிப்பாக, அழியும் ஆபத்தில் உள்ள கலாசாரம், தினசரி வாழ்வு என்ற எல்லாத் தளங்களிலும் இந்த உண்மை உணரப்படவேண்டும். ஒருங்கிணைக்கப்பட்ட இந்தக் கண்ணோட்டம், நம் நிறுவனங்களில் இருக்கும் இயற்கையியலை செயலாக்குகிறது. அனைத்தும் தொடர்புடையவை. என்றால், சமுதாய நிறுவனங்கள் சுற்றுச்சூழலையும் மனித உயிரின் தன்மையையும் பாதிக்கின்றன. இந்த ஒருங்கிணைப்பிற்கு தீங்கு விளையும்போது, அது சுற்றுச்சூழலையும் பாதிக்கிறது (142).

சுற்றுச்சூழல் பிரச்சனைகளின் ஆய்வு, மனித, குடும்ப, பணித்தள ஆய்வுகளிலிருந்து பிரிக்க முடியாதது (141). சுற்றுச்சூழல் ஆபத்து, சமுதாய ஆபத்து என்று இருவகை ஆபத்துக்களை நாம் சந்திக்கவில்லை. இவை இரண்டுமே ஒரே சிக்கலான ஆபத்து (139). மனித இயற்கையியல் பொதுநலனிலிருந்து பிரிக்கமுடியாதது (156). அநீதிகள் பெருகிவருகின்றன, அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒதுக்கப்பட வேண்டியவர்கள் என்ற கருத்துக்கு உள்ளாக்கப்படும் மனிதர்களின் எண்ணிக்கை கூடிவருகிறது (158). இச்சூழலில், மிகவும் வறுமைப்பட்ட சகோதர சகோதரிகளின் சார்பாக நம் அர்ப்பணத்தேர்வு இருக்க வேண்டும் (158). தன்னிலேயே இயங்கக்கூடிய ஓர் எதிர்காலத்தை, அடுத்தத் தலைமுறைக்கு விட்டுச்செல்ல வேண்டுமானால், அது இன்றைய வறியோரைப் பேணுவதில் வெளிப்பட வேண்டும். இதை ஏற்கனவே திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள் கூறியுள்ளார். ஒரு தலைமுறைக்குள் ஒருங்கிணைப்பை உருவாக்குவதோடு, தலைமுறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பை உருவாக்குவதும் அவசரமான நன்னெறித் தேவை (162).

ஒருங்கிணைந்த இயற்கையியல் ஒவ்வொரு நாள் வாழ்வைச் சார்ந்தது. இச்சுற்றுமடலில் நகரச்சூழல் குறித்து சிறப்பான கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மனிதப் பிறவிகள், சூழ்நிலைக் கட்டுப்பாடுகளுக்கு மிகச் சிறந்த முறையில் பதிலுரைக்கும் சக்தி பெற்றவர்கள். தாறுமாறான சூழல்களிலும், தாங்கள் உருவாக் கும் வழிகளில் வாழப் பழகியவர்கள் மனிதப்பிறவிகள் (148). இருப்பினும், பொது இடங்கள், தங்குமிடம், போக்குவரத்து ஆகிய துறைகளில் இன்னும் ஏராளமான, உண்மையான முன்னேற்றம் தேவைப்படுகிறது (150-154). மேலும், உலகமனைத்தையும் இறைவனின் கொடையாக, நமது பொதுவான இல்லமாக ஏற்றுக்கொள்வதற்கு, நமது உடலை இறைவனின் கொடை என ஏற்றுக்கொள்வது முக்கியம். இதற்குமாறாக, நமது உடல்மீது நாம் அளவற்ற அதிகாரம் கொண்டிருப்பதாக நினைத்தால், படைப்பின்மீதும் நாம் அளவற்ற அதிகாரம் கொண்டிருப்பதாகஎண்ணத் தூண்டும் (155).

## பிரிவு 5 - அணுகுமுறை மற்றும் செயல்பாட்டு வழிகள்

நாம் என்ன செய்ய முடியும், என்ன செய்ய வேண்டும் என்பதை இந்தப் பிரிவு விவரிக்கின்றது. வெறும் ஆய்வுகள் போதுமானவை அல்ல. நமக்குச் செயல் திட்டங்கள் தேவை. உரையாடல் மற்றும் செயல்பாடுகள் தனிப்பட்ட நிலையிலும், பன்னாட்டு அளவிலும் உருவாக, செயல் திட்டங்கள் தேவை (15). நம்மைத் தற்போது அடுக்கடுக்காய் சூழ்ந்துவரும் அழிவிலிருந்து தப்பிக்க இதுவே சிறந்த வழி. நமது செயல்திட்டங்கள் மேலோட்ட மான, ஏட்டளவான வழிகளில் உருவாகக் கூடாது என்பதில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கவனமாக உள்ளார். இதற்கு, உரையாடல் மிக அவசியம். உரையாடல் என்ற வார்த்தை, இந்தப் பிரிவு முழுவதும் பயன்படுத்தப்பட்டுள்ளது. "ஒரு சில சுற்றுச்சூழல் கேள்விகளுக்கு ஒத்தமைந்த ஒப்புதல் கிடைப்பது எளிதல்ல. அறிவியல் கேள்விகளுக்குப் பதில் தருவதோ, அரசியலுக்கு மாற்றாக அமைவதோ திருஅவை எடுத்துக் கொள்ளும் பொறுப்பு அல்ல. அதேவேளையில், பொதுநலனை மனதில்கொண்டு, திறந்த மனதுடன், நேர்மையான முறையில் வாதங்களை மேற்கொள்வதை நான் ஊக்குவிக்கிறேன்" (188).

பன்னாட்டு முயற்சிகள் குறித்து தன் கருத்தை வெளியிடத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அஞ்சவில்லை. "சுற்றுச்சூழலைக்குறித்து நடத்தப்பட்ட அண்மைய உச்சி மாநாடுகள், எதிர்பார்த்த பலனைத் தரவில்லை அரசியல் மன உறுதி இல்லாததால், சுற்றுச்சூழல் குறித்த உலகளாவிய ஒப்பந்தங்கள் உருவாகவில்லை" (166). "அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற் காக, அவசரமான, தேவையான முடிவுகள் எடுக்காமல் இருப்பதற்கு எது இவர்களைத் தூண்டுகிறது?" (57) இதற்குப் பதிலாக, உலக நிர்வாகத்திற்கு வடிவங்களும், கருவிகளும் தேவைப்படுகின்றன (175). இதையே 'Pacem in Terris' (உலகில் அமைதி) என்ற சுற்றுமடல் துவங்கி, திருத்தந்தையர் கூறிவருகின்றனர். உலக நிர்வாகத்தின் ஒரு முக்கிய கூறு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு. இதை, வரவு செலவுக் கணக்குகளின் அடிப்படையில் தீர்மானிக்க முடியாது. சுற்றுச்சூழல் என்பது, வர்த்தக சந்தையின் சக்தியால் காப்பாற்றமுடியாத ஒரு பொருள் (190).

ஐந்தாவது பிரிவில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திறந்த மனம் கொண்ட, நேர்மையான, முடிவெடுக்கும் முறையைக் குறித்து அழுத்தந் திருத்தமாகக் கூறியுள்ளார். உண்மையான, முழுமையான முன்னேற்றத்தைக் கொணரும் கொள்கைகளும், வியாபார முனைப்புகளும் எவை என்பதை உய்த்துணர இத்தகைய முடிவெடுக்கும் முறை உதவும் (185). புதிதாகத் துவக்கப்படும் வியாபார முயற்சிகள், சுற்றுச்சூழலை எவ்வகையில் பாதிக்கின்றன என்பது பற்றிய வெளிப்படையான கருத்துப் பரிமாற்றங்கள் தேவை. இதற்கு மாறாக, சுற்றுச்சூழலுக்குப் பாதகமான வர்த்தக முயற்சிகளுக்கு, உத்தரவுகள் வழங்கப்படுவதற்குப் பின்னே இருக்கும் ஊழல்களும் வெளிப்படையாக விவாதிக்கப்பட வேண்டும் (182).

இந்தப் பிரிவில் மிக முக்கியமான வேண்டுகோள், அரசியல் அதிகாரம் கொண்டவர்களுக்கு விடப்பட்டுள்ளது. இன்றைய உலகில் பெருமளவு நிலவும் 'திறமையானவை' 'உடனடியானவை' (181) என்ற மனநிலையைத் தவிர்க்க வேண்டும் என்று இவ்விண்ணப்பம் கூறுகிறது. அரசியல் அதிகாரிகள் துணிவுமிக்கவர்களாக இருந்தால், கடவுள் அவர்களுக்கு வழங்கியுள்ள இந்த உயர் நிலைக்கு ஏற்றவாறு நடந்து, சுயநலமற்ற பொறுப்பு என்பதற்கு ஒரு சாட்சியத்தை விட்டுச்செல்வர் (181).

## அத்தியாயம் 6 - இயற்கையியல் சார்ந்த கல்வியும் ஆன்மீகமும்


இறுதிப் பிரிவு, இயற்கையியல் சார்ந்த மனமாற்றத்தை நோக்கி அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறது. கலாசார ஆபத்து மிக ஆழமானது, பழக்க வழக்கங்களை மாற்றுவது அவ்வளவு எளிதல்ல. கல்வியும் பயிற்சியும் மிக முக்கியமான சவால்கள். "தூண்டுதலும் கல்வி முறையும் இன்றி மாற்றங்கள் இயலாத ஒன்று"(15). அனைத்துக் கல்வித் துறைகளும் இதில் ஈடுபட்டுள்ளன. சிறப்பாக, 'பள்ளியில், குடும்பத்தில், தொடர்பு சாதனங்களில், மறைக்கல்வியில், வேறு இடங்களில்' (213). ஒரு புது வாழ்வு முறையைக் குறிவைப்பது' (203- 208) என்பதே ஆரம்பப் புள்ளி. இந்த ஆரம்பப் புள்ளியிலிருந்து, அரசியல், பொருளாதார, சமூக சக்தி கொண்டோர்மீது நலமான அழுத்தத்தை உருவாக்க முடியும் (206). "பொருட்களை வாங்குவோர் செய்யும் தேர்வுகள், வர்த்தக நடைமுறைகளில் மாற்றங்களைக் கொணரும். தொழில் உற்பத்தி, சுற்றுச்சூழல் மீது பதிக்கும் காலடித் தடங்களை மறுபரிசீலனை செய்ய அவர்களைக் கட்டாயப் படுத்தும்" (206). சுற்றுச்சூழல் கல்வியின் முக்கியத்துவம் பற்றிச் சொல்லித் தெரிய வேண்டியதொன்றுமில்லை. இக்கல்வி, தண்ணீர்ப் பயன்பாட்டைக் குறைப்பது, கழிவுகளைத் தனித்தனியே பிரிப்பது, 'தேவையற்ற விளக்குகளை அணைப்பது' (211) போன்ற நமது தினசரிப் பழக்க வழக்கங்கள் மீது தாக்கங்களை ஏற்படுத்துகிறது. ஒருங்கிணைக்கப் பட்ட இயற்கையியல் என்பது, வன்முறை, சுரண்டல், தன்னலம் என்ற எண்ண ஓட்டங்களை உடைக்கும் தினசரி செயல்பாடுகளில் அடங்கியுள்ளது (230). நம்பிக்கையிலிருந்து பிறக்கும் ஆழ்நிலைப் பரவசம் கொள்ளும் பார்வை இருந்தால், அனைத்தும் எளிதாகும். "நம்பிக்கை உள்ளவர்களாக, வெளியிலிருந்து அல்ல, உள்ளிருந்து உலகைக் காண்கிறோம். உலகின் அனைத்துப் படைப்புக்களோடும் தந்தை நமக்களித் துள்ள பிணைப்பை உணர்கிறோம். இறைவன் தந்த நமது தனித்துவத்தை வளர்ப்பதால், இறையியல் சார்ந்த மனமாற்றம் பெற்று, படைப் பாற்றலில் வளர்வோம்" (220). 'நற்செய்தியின் மகிழ்வு' (Evangelii Gaudium) என்பதில் கூறப்பட்டிருப்பதுபோல், சுதந்திரமாக, மனதார வாழும் தன்னடக்கம், விடுதலை தரும் (223), நம்மைக் கீழ்மைப்படுத்தும் சில தேவைகளை எவ்விதம் கட்டுப்படுத்துவது என்பதை அறிவதே மகிழ்வு. இதனால் வாழ்வு வழங்கும் வேறுபட்ட சாத்தியங்களுக்கு நம்மையே திறந்தவர்களாக்குகிறோம் (223). இவ்வழியில், நமக்கு மற்றவர்கள் தேவை என்பதையும், நம் அனைவருக்கும் இவ்வுலகின்மீது பொறுப்பு உள்ளது என்பதையும் உறுதியாக உணர்வோம் (229).

நமது பயணத்தில் புனிதர்கள் நமக்குத் துணையாக வருகின்றனர். நலிந்தோரைக் காப்பதற்கும், ஒருங்கிணைக்கப்பட்ட இயற்கையில் உண்மையான மகிழ்வுடன் வாழ்வதற்கும் ஈடு இணையற்ற எடுத்துக்காட்டு புனித பிரான்சிஸ் (10). இயற்கைமீது அக்கறை, வறியோருக்கு நீதி, சமுதாயத்திற்கு அர்ப்பணம், உள்ளார்ந்த அமைதி ஆகிய அனைத்திற்கும் உள்ள பிணைப்பை வெளிப்படுத்தும் எடுத்துக்காட்டு அவரே (10). இந்தத் திருமடல், புனித பெனடிக்ட், லிசியு நகர் புனித தெரேசா, அருளாளர் Charles de Foucauld ஆகியோரையும் குறித்துப் பேசுகிறது. 'Laudato Si' யினால் தூண்டப்பட்டு மேற்கொள்ளப் படும் முறையான ஆன்ம ஆய்வு, ஒரு புதிய பரிமாணத்தை உள்ளடக்கவேண்டும். ஒருவர், கடவுளோடும், மற்றவரோடும், தன்னோடும் எவ்வகை உறவில் உள்ளார் என்பது மட்டுமல்ல, உலகப் படைப்புகள் அனைத்தோடும், இயற்கையோடும் எவ்வகை உறவில் வாழ்கிறார் என்பதையும் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்.

*(அடைப்புக்குறிக்குள் உள்ள இலக்கங்கள் சுற்றுமடலின் பந்தி இலக்கங்களாகும்)*

*(முற்றும்)*

# பணியாளன் மா.றேஜிஸ் இராசநாயகத்தின் ஆக்கங்களுக்கு ஓர் அறிமுகம்



## அமைதியில் ஆண்டவரோடு...




சத்தக் கலாசாரத்தோடு சங்கமமாகி விட்டது இன்றைய சமுதாயம். எங்கும் சத்தம்; எதிலும் சத்தம். சமயமும் ஏன், சமய வழிபாடுகளும் கூட இதற்கு விதிவிலக்கல்ல. அமைதியில் இருக்க வும், அமைதிக்குள் இறங்கவும் பழக்கப் படாததால்தான் ஆன்மீகம் என்னும் ஆழ்கடலுள் மூழ்கி இறையனுபவம் என்னும் முத்தை எடுக்க முடியாதவனாக மனிதன் மூச்சுத் திணறுகின்றான். வெற்று வார்த்தைகளை அடுக்கிக் கொண்டு போகிறான்; வெளியே நின்று வேடிக்கை பார்க்கிறான். இந் நிலையில் தான் "அமைதிகொண்டு நானே கடவு ளென உணர்ந்து கொள்ளுங்கள்" என்கி றது தி.பா 46:10

செபம் என்றால் என்ன? செபிக்கும் முறைகள் எவை? எவை? செபத்தில் நிகழ்வது என்ன? என்ற கேள்விகள் முக்கியமானவை. செபவாழ்வின் பிரச் சினை என்ன என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும். சிறுபருவந்தொட்டு செபிக்கின் றோம். ஆனால் ஏன் வாழ்வில் மாற்றம் ஏற்படுவதில்லை? வாழ்க்கையில் சிறு புயல் வீசியவுடன் "இறைவன் உண்மை யில் இருக்கிறாரா? மெய்யாகவே எனது செபத்திற்குச் செவிசாய்ப்பாரா? அல்லது நான் காற்றோடு பேசுகிறேனா? " என்று பேதலிக்கிறோம். உண்மையில் செபத் தின் உச்சக்கட்டம் அமைதி. அமைதியில் ஆண்டவரிடம் சரணடைவது; அவரோடு சங்கமமாவது.

ஆண்டவரைத் தேடி அவரது உறவில் வளரும்போது என்ன நிகழ்கிறது? முதலில் நாம் அவரது அமைதியில் ஆழமாகச் செல்வோம். ஆவியின் கனி களான சமாதானம், மகிழ்ச்சி, அன்பு எமது நிலையான உள்ளார்ந்த அனுபவமா கிறது. எம்மைப் பெரிதும் பாதித்த தடைக் கற்கள் ஆண்டவரின் மலைமேல் ஏறிச் செல்வதற்கான படிக்கற்களாகின்றன. அடுத்ததாக ஆண்டவரின் வார்த்தையைத் துல்லியமாகக் கேட்கப் பழகுகின்றோம். வாழ்விலே, வரலாற்றிலே ஓங்கி ஒலிக் கும் அவரது குரலைக் கேட்க முடியும்; அடையாளங்களை இனங்கான முடியும். எமது உள்ளத்தின் ஆழத்தில் ஊற்றெடுத் துப் பாயும் இறை அன்பு, இரக்கம், மன்னி ப்பு என்பவற்றின் ஊற்று ஆவியானவரே என்பதை இனங்காணுகின்றோம்.

இறைவனது அன்பில் திளைக்கும் இந்த அனுபவம் எமது ஆன்மாவின் ஆழத்தில் இறைவன்பால் உள் ஈர்ப்பை ஏற்படுத்துகின்றது. இவ் அன்பு பாசமாகி எமது உள்ளத்தின் ஆழத்தையும் மாற் றிக் கொள்ளுகின்றது. இறைவனை அன்பு செய்வதே எம் வாழ்வின் நோக்கமாகின் றது. ஆண்டவரது கரம் எம்மீது இருப்பதா லும், ஆவியால் எம்மை வழிநடத்துவதா லும் மனித நிலையில் பெருமுயற்சி எடுக்க வேண்டியவையும், பெருஞ்சுமை யுமாக இருந்தவையுமானவை இப் பொழுது இலகுவானவையாகவும் மகிழ்ச் சியானவையாகவும் மாறுகின்றன.

இவற்றை அடிப்படையான அனுபவ மாகக் கொடுப்பதுதான் 64 பங்கங்களைக் கொண்ட இச் சிறிய நூல்.

இந்நூல் சகோ.லலித் பெரேரா எழு திய QUIET TIME WITH THE LORD என்னும் நூலின் தமிழாக்கம்.

இந்நூல் 06 அத்தியாயங்களைக் கொண் டுள்ளது.

01. செபம் பற்றிய எமது கண்ணோட்டம் என்ன?
02. ஆண்டவருடன் தனிப்பட்ட சந்திப்பு
03. இறைவனிடமிருந்து விலகுதல் ஆன்மீக இருள்
04. இறைவனோடு சந்திப்பு
05. அமைதியான நோக்கத்தை ஆரம் பிப்பது எப்படி?
06. இறைவார்த்தை மூலம் இறைவ னது குரலைக் கேட்பதற்கு சில உதா ரணங்கள்.

சாதாரணமாகவும் ஆடலாம்! விதி முறையாகவும் ஆடலாம்! சாதாரணமா கவும் விளையாடலாம்! விதி முறையாக வும் விளையாடலாம். அது போலவே சாதாரணமாகவும் செபிக்கலாம். விதி முறையாகவும் செபிக்கலாம்.

நற்கருணை ஆண்டவர் முன்பாக இறைவார்த்தை இழையோட இத யத்தின் ஆழத்தில் இறைவன் பேசு வதை உணரத்தூண்டும் அருமை யான நூல் இது.

**விலை ரூபா 50/=**

**கிடைக்கும் இடங்கள்:**

மறைக்கல்வி நடுநிலையம்,
யாழ்ப்பாணம்
புனித அந்தோனியார் ஆலயம்,
பாஷையூர்
அருள் ஆச்சிரமம்
புதுமை மாதா ஆலயம்

## இயேசு அன்பின் சமுத்திரம்




சமுத்திரத்திற்கு ஒரு சிறப்பான தன்மை உண்டு. மறைந்திருக்கும் உட்பகுதியை யும் அதன் ஆழத்தையும் எவரும் உண் மையில் முதல் பார்வையிலேயே அறிந்து கொள்ள இயலாது. முதன் முதல் அதன் அமைதியான மென்மை, மற்றும் நீலப் - பச்சை வர்ணத்தினால் எல்லோரும் அதன் பால் கவரப்படுகின்றனர். ஆனால், சமுத்திரத்தின் ஆழத்தைப் பார்க்க ஆரம் பித்தால் அவருக்குச் சமுத்திரம் சவாலாக வும், விறுவிறுப் பூட்டுவதாகவும் பயமூட்டு வதாகவும் இருக்கும். இதன்பின் சமுத் திரத்தின் தோற்றம் அவரின் மனதில் பெரிது பெரிதாக வளரும். சவால்களுக்கு முகங்கொடுக்கவும் வேதனைகளை அனுபவிக்கவும் வேண்டி வரலாம். ஆனால் சமுத்திரத்தின் அற்புதத் தன் மையையும் பெறுமதியையும் உணரும் பொழுது அவைகளினால் தூண்டப்படுவ தைக் காண்பர்.

"இயேசு தான் அன்பின் சமுத்திரம்". உண்மையாகவே அவர் அமைதியான மென்மையான மனிதப் பிறவிதான். பல காரணங்களால் எல்லோரும் அவர்பால் ஈர்க்கப்படுகின்றனர். சிலருக்கு அவர் கொடை வள்ளல், வேறு சிலருக்குப் புது மைகள் புரிபவர். வேறு சிலருக்கு சுகம ளிப்பவர். இன்னும் சிலருக்கு விடுதலை வீரர் இவையெல்லாம் கடற்கரையில் இருந்து கடலைப் பார்க்கின்றவர்களின் காட்சி. தனக்குள்ளே ஊடறுக்கும் இயேசு வின் காட்சியும், அன்பும் வித்தியானச மான ஒன்று. அவரிலும், அவரின் இயல் புக்குள்ளும் தேடுவதனாலும் மற்றும் செபித்து அவருடன் தனிப்பட்ட உறவு முறை பேணுவதிலும் தான் அது அகப் படுகின்றது. இயேசுவில் அவர் கடவு ளையே காண்பார். அவரில் தனது மீட் பைக் காண்பார். எல்லாவித ஆன்மீக செல்வங்களையும் அவரிலிருந்து பெறுவார்.

உலகளாவிய ஆன்மீகக் குணமாக் கும், மற்றும் அவைசார் சேவைகளின் போதகரான மிகவும் வணக்கத்திற்குரிய அருட்பணி யோசப் கே.பில் கேரளா மாநிலத்தின் வின்சன்சியன் சபையைச் சார்ந்தவர். சாலைக்குடி ஆன்மீக நிலை யத்தின் ஆரம்ப நிறுவுனர்களில் இவரும் ஒருவர். இவரது தொலைநோக்கு சிறு சிறு இறைவார்த்தைப் பகிர்வுகளோடு நற்கருணை ஆண்டவர் முன் அமைதி யில் இருப்பது. சில சில காரணங்களால் சில காலத்தின் பின் இவர் அமெரிக்கா விலே தங்கி முழு உலகிற்கும் வானொலி, தொலைக்காட்சி மூலம் ஞானவொடுக் கங்களை நடத்தி இரண்டு வருடங்க ளுக்கு முன் இறைபதம் அடைந்தார்.

அவரது உரைகளின் தமிழாக்கமே இச் சிறிய கைநூல். இதில் 12 அலகுகள் உள்ளன.

01. இறைவன் அன்பின் வெளிப்பாடு
02. இறையன்பின் இயல்பு
03. மனிதனின் பாவமும் அதன் தாக்கங்களும்
04. இயேசு உலகின் மீட்பர்
05. மன்னித்தலும், தவநிலையும்
06. உள்ளக குணமாக்கல்
07. குணமாக்குபவரான இயேசு
08. தூய ஆவியில் திருமுழுக்கு
09. விசுவாசத்தின் சக்தி
10. புனித நற்கருணை - அன்பின் சமுத்திரம்
11. மரியாள் எமது அன்னை
12. நீர் புனிதராகலாம்

**நூலின் விலை ரூபா 150/=**

**கிடைக்கும் இடம்:**

மறைக்கல்வி நடுநிலையம்,
யாழ்ப்பாணம்

## உலகில் மரங்களின் எண்ணிக்கை பாதியாகக் குறைந்துள்ளது

உலகில் மரங்களின் எண்ணிக்கை பாதியாகக் குறைந்துள்ளது என்றும், தற்போது 3.04 ட்ரில்லியன் மரங்களே உள்ளன எனவும், வன மரங்கள் அடர்த்தி வரைபடம் தெரிவிக்கிறது.

ஒவ்வோர் ஆண்டும் வெட்டப்படும் மரங்களின் எண்ணிக்கை 1,500 கோடிக்கும் அதிகமாகியுள்ளது. மேலும் ஆண்டொன்றுக்கு 192,000 சதுர கீ.மீ. பரப்பளவுக்கு காடுகள் அழிக்கப்படு கின்றன.

காடுகள் அதிவேகமாக அழிக்கப்பட்டு வருவதால் மனித நாகரீகம் துவங்கிய போது இருந்த மரங்களின் எண்ணிக்கை, தற்போது பாதியாக குறைந்துள்ளது. இத்தகவல்கள், 'நேச்சர்' என்ற ஆய்வி தழில் இப்புதனன்று வெளியாகியுள்ளன.

நீராதார இருப்பின் அளவுகளுக்கு இடையே இடைவெளி மிகுந்துள்ளதால், மரங்களின் வளர்ச்சி விகிதமும் கடுமை யாகக் குறைந்துள்ளது என்றும், அடர்ந்த காடுகள் பல, விவசாய நிலங்களாக மாற்றப்பட்டதும், மரங்கள் காணாமல் போனதற்கு காரணமாகியுள்ளது என்றும் இந்த ஆய்விதழ் சுட்டிக்காட்டுகிறது.

இந்த ஆய்வின் வழியாக, புவி வெப்ப மடைதலில் மனிதர்களின் செயல்பாடுகள் குறித்த புதிய புரிதல்களும், உலக நாடு கள் மேற்கொள்ள வேண்டிய புதிய உற் பத்திக் கொள்கைகள் பற்றியும் சிந்திக்க வேண்டிய காலக்கட்டம் உருவாகியுள்ள தாக தெரியவந்துள்ளது.

## 31ம் நாள் இதய அஞ்சலி

"ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அருமையானது"
(தி.பா. 84:1)

தோற்றம்
23 . 08 . 1958



மறைவு
31 . 08 . 2015

அமரர்

### கொன்சலா புவனராஜேஷ் அமலரட்ணம்

புயலோடு பெருவெள்ளம் நாசம் செய்தது போல்
நின் பிரிவு எமையெல்லாம் வாட்டி வதைக்குதம்மா
இயலாமல் எம்மோடு நீ இருந்த காலத்தில்
உனைச்சுற்றி நாமெல்லாம் மகிழ்வோடு வாழ்ந்திருந்தோம்
உணவூட்டி மகிழ்ந்தோம், கரம் பிடித்து நடந்தோம்
கண்கள் உறங்காமல் அன்போடு பராமரித்தோம்
கண்ணின் அசைவிலும், புன்முறுவல் சிரிப்பிலும்
கவலைகள் மறந்து களிப்போடு வாழ்ந்திருந்தோம்
திரும்புகின்ற இடமெல்லாம் நின் வதனம் தெரிகின்றது
படுக்கையில் புரண்டாலும் இமைகள் மூட மறுக்கின்றது
தினமும் நினைத்திடுவோம் அமைதி பெற செபித்திடுவோம்
பசுமை நிறை நினைவுடனே வாழ்வினைத் தொடர்ந்திடுவோம்

இவரின் ஆன்மசாந்தித் திருப்பலி 30.09.2015 புதன்கிழமை தூய மரியன்னை பேராலயம், அருள் ஆச்சிரமம், பாஷையூர் தூய அந்தோனியார் ஆலயம், சுண்டுக்குளி திருமுழுக்கு யோவான் ஆலயம், நல்லூர் தூய ஆசீர்வாதப்பர் ஆலயம், தூய அடைக்கல அன்னை ஆலயம், குருநகர் தூய யாகப்பர் ஆலயம் ஆகிய இடங்களில் காலை 06.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும். இத் திருப்பலியில் பங்கு கொண்டு இவரின் ஆன்ம சாந்திக்காக செபிக்குமாறு அன்போடு அழைத்து நிற்கின்றோம்.

200, குருசோ வீதி,
யாழ்ப்பாணம்.

இ.அ. அமலரட்ணம்
(கணவன்)
பிள்ளைகள், மருமகள், சகோதரர்கள்

## இறைவனின் பிரசன்னத்தில் 10ம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு
17 . 03 . 1940



இறப்பு
12 . 09 . 2005

AD 67

### அமரர் ஆசீர்வாதம் தோமஸ்

"நன்று, நன்று. நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே! சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர். எனவே பெரிய பொறுப்புகளில் உம்மை அமர்த்துவேன். உம் தலைவனாகிய என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்கு கொள்ளும்."

அன்புடன் நினைவுகூரும் மனைவி, பிள்ளைகள்
பேரப்பிள்ளைகள்

## கியூபாவில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கியூபா நாட்டில் 1959ம் ஆண்டு இடம்பெற்ற புரட்சிக்குப் பின், இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் சிறைக் கதிகள் விடுவிக்கப்படுவது இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத் தக்கது.

கியூபா நாட்டிற்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வருகை தருவதை சிறப்பிக்கும் வகையில் 3,522 கைதிகள் விடுதலை பெறவுள்ளனர்.

வயது முதிர்ந்தோர், நோயுற்றோர், பெண்கள், 20 வயதிற்கு உட்பட்ட சிறார் என்ற அடிப்படையில் இவர்கள் விடுவிக்கப்பட விருப்பதாகவும், தேசப் பாதுகாப்பிற்கு ஊறு விளைவித்தோர் இந்தச் சலுகையைப் பெற மாட்டார்கள் என்றும் அரசு அறிவித்துள்ளது.

ஏற்கனவே, திருத்தந்தையர் இரண்டாம் ஜான் பால் மற்றும், 16ம் பெனடிக்ட் ஆகியோர் கியூபா நாட்டிற்கு மேற்கொண்ட திருப் பயணங்களுக்கு முன்னரும், கைதிகள் இதேபோல் விடுவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத் தக்கது.

## திருமண...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலைப்பிடப்பட்ட அப்போஸ்தலிக்க மடல், கீழை வழிபாட்டு முறை திருஅவையில் திருமண ஒப்பந்த முறிவு குறித்த வழிமுறைகளைத் துரிதப்படுத்தும் நோக்கில் சீரமைப்பதாகவும் அமைந்துள்ளது.

திருத்தந்தை வழங்கியுள்ள இந்தப் புதிய கோட்பாடுகள், திருமண ஒப்பந்த முறிவை ஆதரிக்கவில்லை, மாறாக, திருமண ஒப்பந்த முறிவு வழிமுறைகளைத் துரிதப்படுத்தும் வகையில் வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை, திருஅவையில் நிலவி வந்த திருமண முறிவு சட்டங்களின் பாதை, மிகவும் சிரமமாக உள்ளதை மாற்றி, அவற்றை, விரைவானதாக மாற்றும் வழிகளை உருவாக்க வேண்டும் என்று திருத்தந்தை கேட்டுக்கொண்டுள்ளார்.

ஒரு மறைமாவட்டத்தின் ஆயரே, இத்தகைய விடயங்களில் முதன்மை நீதிபதி என்பதை வலியுறுத்தும் திருத்தந்தை, ஒரு நாட்டின் ஆயர் பேரவையின் கடமைகளையும் இங்கு எடுத்துரைத்துள்ளார்.

திருமண முறிவு குறித்த சட்ட வழிமுறைகளை விரைவுப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில், இது குறித்த ஆய்வினை மேற்கொள்ள வல்லுநர் குழு ஒன்றை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏற்கனவே நியமித்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

## தந்த facebook போதனை

இறைவன் நல்ல மனிதர்களை அதிகம் நேசிக்கிறான்... ஏனோ தெரியவில்லை அவர்களையே அதிகம் சோதிக்கிறான்....

## இம்மாதம் 25ம் தேதி ஐ.நா. தலைமையகத்தில் திருத்தந்தை உரையாற்றுவார்

இம்மாதம் 25ம் திகதி, நியூயார்க் நகரில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் நடைபெறும் பொது அமர்வில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கவிருக்கும் உரைகுறித்து, இவ்வியாழன் வத்திக்கான் வானொலிக்கு அளித்த பேட்டியில் பான் கி மூன் அவர்கள் கருணையுடன் மனித குலத்தை வழிநடத்தி வரும் பணிவுள்ளமும், மனிதமும் கொண்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உலகின் 150க்கும் மேற்பட்ட நாடுகளில், முடிவெடுக்கும் சக்தி பெற்ற தலைவர்கள் முன்னிலையில் வழங்கப்போகும் இந்த உரை, வரலாற்று சிறப்பு மிக்கதாக அமையும் என்று சுட்டிக்காட்டினார்.

## துறவு சபைகளின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அருள் பணியாளர் என்ற நிலையில் வாழ்வோர், செப வாழ்வையும், பணி வாழ்வையும் தகுந்த அளவில் கலந்து, வாழவேண்டுமே தவிர, இவை இரண்டும் ஒன்றுக்கொன்று எதிராக மோதும்படி வாழ்வது அல்ல என்று திருத்தந்தை தன் உரையில் குறிப்பிட்டார்.

செபத்தில் இறைவனின் குரலைக் கேட்பதுபோல், மக்களின் குரலையும் கேட்கும் பக்குவத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று, திருத்தந்தை எடுத் துரைத்தார்.

1914ம் ஆண்டு, ஜெர்மன் நாட்டின் Schönstatt என்ற இடத்தில்தொடக்கப்பட்ட 'Schönstatt அருள்பணியாளர்கள்' என்ற துறவுசபை, சென்ற ஆண்டு, தன் நூற்றாண்டைக் கொண்டாடியபோது, தன்னைச் சந்தித்ததையும்,திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்த சந்திப்பின் போது நினைவுகூர்ந்தார்.

## 17ம் வருட நினைவஞ்சலி

எம்முடன்
08 . 04 . 1968



இறைவனுடன்
30 . 09 . 1998

### செல்வி மெர்லீன் மைதிலி தார்சீசியஸ்

(முன்னாள் ஆசிரியை யாழ். O.L.R, புனித பத்திரிசியார் கல்லூரி)

நேச மகளே நீ மறைந்து ஆண்டுகள் பதினேழு ஆனதம்மா.
பாச மகளே எம் இல்லத்தின் ஒளி விளக்காய்
புன்னகை வதனத்துடன்
பாடிப் பறந்த நீ ஓடிச் சென்றனையோ பரமனிடம்
வாடி நிற்கின்றோம் என்றும் உன் நினைவில்
நாடியே இறைவனிடம் வேண்டுவோம்
இன்றும் என்றும்

AD68

பாசமுடன் நினைந்துருகும்
உன் அப்பா, அம்மா,
சகோதரர்கள், சகோதரி,
மைத்துனர்கள், குடும்பத்தினர்.

கல்கிசை

# புனித பத்திரிசியார் கல்லூரியில் புதிய வாசல் வளைவும் புதிய டெனிஸ் பந்தாட்டத்திடலும் திறந்து வைப்பு




தியாகி அறக்கொடை நிலையத்தின் அனுசரணையோடு யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட வாசல் வளைவும், முன்னாள் பிரபல டெனிஸ் பந்தாட்ட வீரர் திரு. வாமதேவா ஞாபகார்த்த டெனிஸ் பந்தாட்டத் திடலும் கடந்த செப்ரெம்பர் மாதம் 10ம் திகதி யாழ். ஆயர் பேரருட் திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் திருமதி S. வாமதேவா, தியாகி அறக்கொடை நிலைய நிறுவுனர் திரு. V. தியாகேந்திரன் ஆகியோரோடு யாழ். உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. S. மாணிக்கராஜா, சட்டத்தரணி திரு. V.T. சிவலிங்கம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள்.

### இரக்கத்தின் யூபிலி ஆண்டில்

# அன்னை திரேசாவுக்குப் புனிதர் பட்டம்?



அருளாளர் அன்னை திரேசாவை புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இவ்வேளையில் இவ்வருடம் டிசெம்பர் மாதம் ஆரம்பிக்கும் இரக்கத்தின் யூபிலி ஆண்டில் அவருக்குப் புனிதர் பட்டம் அளிக்கப்படலாம் என வத்திக்கான் செய்திகள் கூறுகின்றன. ஏழைகள், அநாதைகள், கைவிடப்பட்டோர் போன்றோரைத் தனது இரக்கத்தின் மிகுதியால் அரவணைத்து ஆதரித்த அன்னை திரேசாளுக்கு இரக்கத்தின் யூபிலி ஆண்டில் புனிதர் பட்டம் வழங்குவது பொருத்தமானது எனப் பலரும் கருதுகின்றனர்.

## திருப்பாலத்துவ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அருட்பணியாளர் அன்ரனி மைக்டொனால்ட் அடிகளாராலும் ஏற்றி வைக்கப்பட்டது. வரவேற்பு நடனத்துடன் நிகழ்வுகள் ஆரம்பாகின. சிறுவர்கள் மைதானத்திற்குக் கூட்டி செல்லப்பட்டார்கள். ஊக்குவிப்பாளர் வளவாளர் திரு. றோமியல் அவர்களால் விளையாட்டுக்கள் ஒழுங்கமைத்து நிகழ்த்தப்பட்டன. வருகைதந்த 50 ஊக்குவிப்பாளர்களும் ஒவ்வொரு குழுவுக்கும் பிரிக்கப்பட்டனர். யாழ் மறைக்கோட்டப் பங்குகளைச் சேர்ந்த பங்குத்தந்தையர்களும், உதவிப் பங்குத்தந்தையர்களும் இதில் கலந்து கொண்டு சிறுவர்களை உற்சாகப்படுத்தினர். இடைவேளையின்போது சிறுவர்களுக்குக் குடிபானம் வழங்கப்பட்டது. அதற்கான ஆயத்தங்களை யாழ் பேராலய மறையாசிரியர்கள் மேற்கொண்டனர். மதிய போசன இடைவேளையின் பின்னர் மாணவர்களை மண்டபத்தில் ஒன்று கூட்டி அருட்தந்தை யூட் நிக்சன் அடிகளார் மாணவர்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டது. 11 ஆலயங்களைச் சேர்ந்த சிறுவர்கள் தங்களுடைய ஆற்றல்களை வெளிக்காட்டினர். விளையாட்டுக்களில் வெற்றி பெற்ற சிறுவர்களுக்கும் குழுத் தலைவர்கள், செயலாளர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. 3.30 மணியளவில் திருப்பாலத்துவ சபைக்கீதம் இசைக்கப்பட்டு கொடியிறக்கத்துடன் நிறைவுற்றது.

## கிறிஸ்துவின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கண்காட்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய யாழ். ஆயர் அவர்கள், திருத்தந்தை பிரான்சிஸ் இவ்வருடத்தை அர்ப்பண ஆண்டாக அறிவித்து துறவு சபைகள் தங்கள் அழைத்தல் வாழ்வுநிலையை மீளாய்வு செய்து முன்னோக்கிச் செல்ல இவ் ஆண்டைப் பயன்படுத்த வேண்டும் என்ற அழைப்பை நிறைவேற்றும் ஒரு சந்தர்ப்பமாக இக்கண்காட்சி அமைகிறது என்று குறிப்பிட்டார். மனிதனுடைய வாழ்க்கையில் விளம்பரங்கள் முக்கிய இடத்தைப்பிடிக்கும் இக்காலத்தில் துறவு சபைகள் கிறிஸ்துவின் நற்செய்தியை விளம்பரப்படுத்துவதில் முதல் கவனம் எடுக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்ட ஆயர் அவர்கள் இக்கண்காட்சியில் ஆர்வத்தோடு பங்குபற்றிய யாழ். மறைமாவட்டத்தில் பணியாற்றும் 16 துறவு சபையினருக்கும், இதனை இணைந்து ஏற்பாடு செய்த யாழ். மறைக்கல்வி நிலையம், யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் கழகம் ஆகியவற்றுக்கும் தனது நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்தார்.

யாழ். மறைமாவட்டத்தின் நாலாபக்கங்களிலுமிருந்து ஏராளமான பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் இக்கண்காட்சியைக் கண்டுகளித்துப் பயனடைந்தார்கள். பல வாலிபர்கள், யுவதிகள், சிறுவர், சிறுமியர்கள் தமது உள்ளங்களில் இறை அழைததலின் குரலைக் கேட்பதற்கு இக்கண்காட்சி உந்துசக்தியாக அமைந்திருந்தது என்று கூறலாம்.

## கொத்து வெடிகுண்டுகளின் தடை திருப்பீடம் மகிழ்ச்சி

கொத்து வெடிகுண்டுகளின் பயன்பாட்டைத் தடைசெய்யவும், பழைய தவறுகளைத் திருத்தவும் முன்வந்திருக்கும் அனைத்து நாடுகளுக்கும், திருப்பீடம் தன் நன்றியையும், வாழ்த்துக்களையும் வெளியிடுவதாக, ஜெனீவாவில் இயங்கிவரும் ஐ.நா. நிறுவனத்தில், திருப்பீடத்தின் நிரந்தரப் பார்வையாளராகப் பணியாற்றிவரும் பேராயர் தொமாசி அவர்கள் தெரிவித்தார்.

மனிதகுலம் காட்டும் அக்கறையின் மையமாக, மனிதர்கள் இருக்கவேண்டும் என்றும், தங்கள் பொறுப்புணர்வுகளைப் புரிந்து, கொத்துவெடிகுண்டுகள் குறித்து, நாடுகள் தகுந்த தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார், பேராயர் தொமாசி அவர்கள்.

ஆயுதத் தடை குறித்த முந்தைய ஒப்பந்தங்கள் தோல்வியடைந்ததிலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்கள் அதிகம் உள்ளன என்று சுட்டிக்காட்டிய பேராயர் தொமாசி அவர்கள், புதிய தடை ஒப்பந்தங்கள் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வதுடன், முந்தைய காலங்களில் கொத்து வெடிகளால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவ வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத் தினார்.

## இரக்கத்தின் யூபிலி ஆண்டு மடலின் தமிழாக்கம்

எமது திருத்தந்தை பிரான்சிஸ் வருகிற ஆண்டு பிரகடனப் படுத்தியுள்ள இரக்கத்தின் யூபிலி ஆண்டை முன்னிட்டு வெளியிட்டுள்ள 'இரக்கத்தின் திருமுகம்' (Misericordiae Vultus) என்னும் மடலின் தமிழாக்கம் பாதுகாவலனின் அடுத்த இதழிலிருந்து தொடர்ச்சியாக வெளிவரும்.

*ஆசிரியர்.*

# நவம்பர் 25 முதல் 30 முடிய திருத்தந்தையின் ஆபிரிக்கத் திருத்தூதுப் பயணம்

கென்யா, உகண்டா, மற்றும் மத்திய ஆபிரிக்கக் குடியரசு ஆகிய ஆபிரிக்க நாடுகளின் அரசுத் தலைவர்களும், ஆயர்களும் விடுத்துள்ள அழைப்பினை ஏற்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நவம்பர் மாதம் 25ம் தேதி முதல் 30ம் தேதி முடிய இம்மூன்று நாடுகளில் திருத்தூதுப் பயணம் மேற்கொள்வார் என்று, திருப்பீடம் இவ்வியாழனன்று அறிவித்துள்ளது.

நவம்பர் 25 முதல் 27 வரை கென்யாவிலும், 27 முதல் 29 வரை உகண்டாவிலும், 29, 30 ஆகிய தேதிகளில் மத்திய ஆபிரிக்கக் குடியரசிலும் திருத்தந்தையின் பயணம் அமையும் என்றும், இப்பயணத்தின் முழு விவரங்கள் விரைவில் வெளியிடப்படும் என்றும், திருப்பீடச் செய்தித் தொடர்பகம் கூறியுள்ளது.

இம்மாதம் கியூபா, மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மேற்கொள்வது, அவரது 10வது பயணமாகவும், ஆபிரிக்க நாடுகளுக்கு அவர் செல்வது 11வது திருத்தூதுப் பயணமாகவும் அமையும்.

இந்த 11 திருத்தூதுப் பயணங்களில் அவர், 19 நாடுகளில் தன் காலடித் தடங்களைப் பதித்துவிடுவார் என்பதும், இவற்றில், ஆசிய நாடுகளான, தென் கொரியா, இலங்கை, பிலிப்பின்ஸ் ஆகியவை அடங்கும் என்பதும் குறிப்பிடத்தக்கன.

# கரையில் ஒதுங்கும் உடல்கள், ஐரோப்பாவுக்கு பெரும் இழுக்கு

### கர்தினால் நிக்கோல்ஸ்

ஒட்டுமொத்த ஐரோப்பா, செல்வம் கொழிக்கும் ஓர் இடமாக இருக்கும்போது, ஆபத்தான கடல் பயணங்களால் மரணமடைந்து, கரையில் ஒதுங்கும் உடல்கள், ஐரோப்பிய சமுதாயத்திற்கு பெரும் இழுக்காக அமைகிறது என்று, இங்கிலாந்து கர்தினால், வின்சென்ட் நிக்கோல்ஸ் அவர்கள் கூறினார்.

சிரியாவிலிருந்து தப்பித்துச் சென்ற ஒரு குடும்பத்தின் 3 வயது சிறுவன், Aylan Kurdi, ஒரு சடலமாகக் கடற்கரையில் கிடந்த படம், சமூக வலைத்தளங்கள் வழியே பரவி, உலக மக்கள் மத்தியில் ஆழ்ந்த துயரத்தையும், அதிர்ச்சியையும் உருவாக்கி வருகிறது.

இது குறித்து, ITV என்ற தொலைக்காட்சியின் செய்தி நிகழ்ச்சியில் பேசிய கர்தினால் நிக்கோல்ஸ் அவர்கள், புலம் பெயர்தல் என்ற உலகளாவிய உண்மை, இதுவரை ஒரு ஏட்டளவு பாடமாக இருந்தது என்றும், இச்சிறுவனின் படம், அதை ஒரு மனிதப் பிரச்சனையாக, நமக்கு முன் சவாலாக வைத்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இதற்கிடையே, ஐரோப்பாவிற்குள் நுழைய முயலும் மக்களைக் குறித்து, அங்கிலிக்கன் சபையின் தலைவரான கான்டர்பரி பேராயர், ஜஸ்டின் வெல்பி அவர்கள் வெளியிட்டுள்ள செய்தியில், பிரிவுச் சுவர்களை உடைப்பதும், அன்னியரை வரவேற்பதும் கிறிஸ்தவ விசுவாசத்தின் அடித்தளம் என்று கூறியுள்ளார்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2015ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.